ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

पापि त्वं त्वां कथमहमवानीति वक्तुं न शक्यं
वेदोक्त्या नो चलति तृणमप्यात्मशक्त्या विना त्वाम् ।
नाहं कुर्वे परमशिव तां दुष्कृतिं त्वां विनाऽत:
पापिव्याजात् त्यजनमपि मे नोचितं सर्ववेदिन् ॥१०॥

பாபி த்வம் த்வாம் கதமஹமவாநீதி வக்தும் ந ஶக்யம்
வேதோக்த்யா நோ சலதி த்ருணமப்யாத்மஶக்த்யா விநா த்வாம் ।
நாஹம் குர்வே பரமஶிவ தாம் துஷ்க்ருதிம் த்வாம் விநாऽத:
பாபிவ்யாஜாத் த்யஜநமபி மே நோசிதம் ஸர்வவேதிந் ॥ ௧௦ ॥

ஸகலவிஷயங்களையும் நன்கறிந்த ஹே பரமேசுவர! என் விஷயத்தில் நீ பாபி, உன்னை நான் எப்படிரக்ஷிப்பேன்என்று சொல்வது உசிதமில்லை. ஏனென்றால் மறை வசனங்கள் உம்மையன்றி தம்முடைய ஸொந்த சக்தியால் திருணமென்கிற புல்லுக் கூட அசையமாட்டாது என்று ஸ்பஷ்டமாய் வெளியிடுகின்றபடியால், உம்முடைய ஏவுதலின்றி நானுக் ஒரு கர்மாவையும் செய்யவில்லை. ஏதாகிலும் பாபகர்மா என்னால் செய்யப்பட்டிருந்தால் அதற்கு நீர்தான்காரணம். நீரே கெட்ட கர்மாவைச்செய் என்று என்னைச் செய்யச்சொல்லி பிறகு பாபி என்று என்னைக் கைவிடுவது எப்படி நியாயமாகும். ஆகையால் பாபி என்கிற வியாஜத்தைக் கொண்டு என்னைக்கவனியாமல் விடுவது ஸர்வ உண்மைகளையும் நன்கு அறிந்த தங்களுக்கு அழகல்ல.

ஹே சந்திர சேகர ! உம்மையே சரணாகதியாக அடைந்த என்னை ஏதாகிலும் வியாஜத்தைக்கொண்டு தள்ளிவிட வேண்டுமென்று கருதி நீ பாபி என்கிற எனக்குச் சம்பந்தமில்லாத சப்தத்தைக் கூறுவது ஸர்வக்ஞான உமக்கு யோக்கியமில்லை. ஆகையால் யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லாமல் என்னிடம் கிருபைசெய்து, ரக்ஷிக்கவேண்டுமென்று ஒரு அடியார் வேண்டுகிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்

ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

## ஸ்ரீமடம் தர்மஸதஸ்.

கும்பகோணநிவாஸிகளான ஸ்ரீகாஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமஹாஸன்னிதானத்தில்:- வைதிக உபாத்தியாயர்களுக்கு "தர்மக்ஞபரீக்ஷை" என்றும், "கிருஹ்யக்ஞபரீக்ஷை" என்றும் இரண்டுவித பரீக்ஷைகளைஏற்படுத்தி தர்மக்ஞபரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு, "धर्मज्ञः (தர்மக்ஞ:) என்றும், கிருஹ்யக்ஞபரீக்ஷையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு "गृह्यज्ञः" (கிருஹ்யக்ஞ:) என்றும்,— யோக்யதா பத்திரிகையும் ஸன்மானமும், கொடுப்பதென்றும் இவ்விதம்யோக்யதாபத்திரம் பெற்றவர்கள்கிடைக்கக்கிடைக்ககிரஹஸ்தர்கள் அவர்களையே உபாத்தியாயாகஏற்படுத்திக்கொள்வதோடு, தாங்கள் நடத்தும் மற்ற தர்மகாரியங்களில் அவ்வித யோக்யதா பத்திரம் பெற்றவர்களுக்கு மற்ற வைதிகர்களைவிட அதிகப்பிரயோஜனம் செய்யவேண்டுமென்றும், இந்த ஏற்பாட்டை எல்லா பிராமணர்களும் அவசியம் அனுஸரிக்க வேண்டுமென்றும்-ஆக்ஞாபித்திருப்பதை முன்னிட்டு நாளது விபவ-௵ புரட்டாசி௴ 5௳ (20-9-1928) குருவாரம் முதல் நான்கு தினங்களில் ஷை பரீக்ஷைகள் தற்காலம் ஸ்ரீமஹாஸன்னிதானம் விஜயமாயிருக்கும் சோழவந்தான் (S. I. Ry.) ரயில்வேஸ்டேஷனுக்கு இரண்டுமைல் தூரத்தில் கிழக்கேயுள்ள திருவேடகம் என்னும் க்ஷேத்திரத்தில் நடைபெறும்.

இதற்குப் பரீக்ஷாதிகாரிகளாக:—
திருவையார்பிரம்மஸ்ரீசாஸ்திரரத்னாகர பா. விசுவநாதசாஸ்திரிகள் அவாகளும், வரகூர் பிரம்மஸ்ரீ ஸ்மிருதிபூஷணம் பாஷ்யபாவக்ஞ ஸ்வா. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

## தர்மக்ஞ கிருஹ்யக்ஞ பரீக்ஷையின் நியமம்.

இப்பரீக்ஷையில் ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்துவர், ஆகிய யாவரும் பிரவேசிக்கத் தக்கவராவார்கள். தர்மக்ஞபரீக்ஷையில் 100-க்கு 75-க்குக் குறையாமல் மார்க்கு வாங்கி முதலாவதாகத் தேறினவர்களுக்கு "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌃" (தர்மக்ஞ:) என்ற யோக்யதா பத்திரமும், ஷை பெயர் பதித்த ஓர் சால்வையும், ஷை பெயர் சதுக்கின ஓர் ஸ்வர்ண மோதிரமும், ஸன்மானம் செய்யப்படும். 100-க்கு 50-க்குக் குறையாமல் மார்க்கு வாங்கி இரண்டாவதாக தேறினவர்களுக்கு "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌃" (தர்மக்ஞ:) என்ற யோக்யதா பத்திரமும் ஷை பெயர் பதித்த ஓர் சால்வையும் ஸன்மானம் செய்யப்படும்.

கிருஹ்யக்ஞபரீக்ஷையில் 100-க்கு 60-க்குக்குறையாமல்மார்க்கு வாங்கினவர்களுக்கு "𑌗𑍃𑌹𑍍𑌯𑌜𑍍𑌞𑌃" (கிருஹ்யக்ஞ:) என்ற யோக்யதா பத்திரமும், ஷை பெயர் பதித்த ஒரு சால்வையும்ஸன்மானம் செய்யப்படும். அடியில்கண்ட விஷயங்களில் வாசிக, லேகன பரீக்ஷைகள் நடத்தப்படும்.

தர்மக்ஞபரீக்ஷையின் விவரம்

### 1 வேதம்

1. ருக்ஸம்ஹிதை ... ... ... கிரமாந்தம்.
2. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை ... ஷை
3. சுக்லயஜுஸ்ஸம்ஹிதை ... ... ஷை
4. ஸாமவேததலவகாரசாகை ஸம்ஹிதை(ஆருணம்ஊஹம்)
5. ஸாமவேதகௌதுமசாகை பிரகிருதி ஊஹாஹஸ்யம் பூர்வருக், உத்தாருக்முடிய. இவ்வைந்துக்குள் ஏதேனுமொன்றை முகஸ்தமாகக் கேட்டவிடத்தில் தவாமல் சொல்லவேண்டும்.

### 2. கிருஹ்யம்

1. ஆசுவலாயன கிருஹ்யஸூத்ரம்.
2. ஆபஸ்தம்ப ,,
3. போதாயன ,,
4. பாரத்வாஜ ,,
5. ஸத்தியாஷாட ,,
6. வைகானஸ ,,

7. ஆக்நிவேச்ய கிருஹ்யஸூத்ரம்
8. காத்தியாயன ,,
9. ஜைமினி ,,
10. காதிர ,,

இந்த 10 கிருஹ்ய ஸூத்திரங்களுள் ஏதாவது ஒன்றின் மூலம் கேட்டவிடத்தில் தவறாமல் முகஸ்தமாகவும், அததன் பாஷ்யாநுஸாரமாக அர்த்தமும், அந்தந்த கிருஹ்யப்படி பிரயோகமும், அந்த கிருஹ்யங்களில் விநியோகிக்கப்படும் மந்திரங்களுக்கு அததன் பாஷ்யானுஸாரமாக அர்த்தமும் சொல்லவேண்டும்.

## 3. ஸ்மிருதி.

1. வைத்தியனாத தீக்ஷிதீயம் ஆறுகாண்டங்களும், அல்லது நிர்ணயஸிந்து அபிநவஷடசீதி இவ்விரண்டு கிரந்தங்களும்.

2. கௌதம தர்மஸூத்திரமும், பாராசரஸ்மிருதியும், அல்லது ஆபஸ்தம்ப தர்மஸூத்திரமும், மனுஸ்மிருதியும், கேட்டவிடத்தில் வியாக்கியானத்துடன் அர்த்தம் சொல்லவேண்டும்,

கிருஹ்யக்ஞ பரீக்ஷையின் விவரம்:—

## 1. வேதம்

1. ருக்ஸம்ஹிதை
2. தைத்ரீய யஜுஸ்ஸம்ஹிதை
3. சுக்லயஜுஸ்ஸம்ஹிதை
4. ஸாமவேத தலவகாரசாகை ஸம்ஹிதை மட்டும்
5. ஸாமவேத கௌதுமசாகை பிரகிருதி ஊஹராஹஸ்யம்

இவ்வைந்துக்குள் ஏதேனுமொன்றை முகஸ்தமாகக்கேட்டவிடத்தில் தவராமல் சொல்லவேண்டும்.

## 2. கிருஹ்யம்.

தர்மக்ஞபரீக்ஷைக்குக் குறிப்பிட்டபடி சொல்லவேண்டும்.

## 3. ஸ்மிருதி

வைத்தியனாத தீக்ஷிதீயம், சிராத்தகாண்டமும், ஆசௌசகாண்டமும் அல்லது நிர்ணயஸிந்து, சிரார்த்தப் பிரகரணமும், அபிநவஷடசீதியும், கேட்டவிடத்தில் விஷயம் சொல்லவேண்டும்.

பரீக்ஷைக்கு வருகிறவர்கள் நாளது விபவ-ஸ்ரீ ஆவணிமீ 5உ (20-8-1928) க்குள் ஸ்ரீமடம் ஸர்வாதிகாரிக்குத்தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

உபபத்திராதிபர்

---

# ஸ்ரீமடம் தர்மஸதஸ்.

கும்பகோண நிவாஸிகளான ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில்—வேதாத்தியயனம் செய்யாமல் சாஸ்திரங்களை மாத்திரம் அப்யஸித்து கும்பகோணம் அத்வைத ஸபையில் எவ்வருஷத்திலாவது ஸம்பாவனைப்பெற்ற பண்டிதர்களுக்கும் தர்ம சாஸ்திரத்திலும் நல்லபரிசயம் ஏற்பட வேண்டிய நிமித்தம் ஸ்மிருதிக்ஞ பரீக்ஷை ஏற்படுத்தி ஷை பரீக்ஷையில் 100-க்கு 60-க்குக் குறையாமல் மார்க்கு வாங்கினவர்களுக்குள் அதிகமாக மார்க்கு வாங்கின ஒரு பண்டிதருக்கு 'ஸ்மிருதிக்ஞ' என்ற யோக்யதாபத்திரமும், ஐம்பது ரூபாய் பிரைஸூம் ஸன்மானம் செய்யப்படும் என்று- ஆக்ஞாபித்திருப்பதை முன்னிட்டு வருகிற சுக்கிலவருஷம் முதல் கும்பகோணம் அத்வைத ஸபை நடைபெறும்போது ஷை பரீக்ஷை நடைபெறும். இதற்குள்ள பரீக்ஷாகிரந்தங்கள், வைத்தியனாத தீக்ஷிதீயம்— 6-காண்டங்களும், மஸ்கரிபாஷ்யத்துடன் கௌதமதர்மஸூத்திரமும், வியாக்கியானத்துடன் அவரவர்களது கிருஹ்யஸூத்திரமும், மாதவீயத்துடன் பாராசரஸ்மிருதியுமாகும். இவைகளில் வாசிக லேகன பரீக்ஷைகள் செய்யப்படும். இந்தப் பரீக்ஷைக்கு வருகிறவர்கள் கும்பகோணம் அத்வைதஸபைநடைபெறும் காலத்திற்கு ஒரு மாஸம் முந்தி ஸ்ரீமடம் ஏஜண்ட் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். ஒரு தடவை பிரைஸ் பெற்றவர் மறுபடி பிரைஸ்ஸூக்கு வரக்கூடாது.

கும்பகோணம் }
28 7-28 }

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி
ஸ்ரீகாரியம் K. குப்புஸ்வாமி அய்யர்.

---

ஸநாதன தர்மப்பிரசாரக ஸபை, கும்பகோணம்.

*President.* *Secretary.*

*Prof.* K. SundararamaIyer M. A., G.V. VenkataramaIyer.

*Editor:*—**S. Mahalinga Iyer** B.A., B.L.

பிரசுரம் 9] விவாஹவயது நிர்ப்பந்தம் [10-7-28

# டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளுக்கு

## சில கேள்விகள்.

(294-வது பக்கத்தொடர்ச்சி)

8, நமது ராஜதானியில் நாற்பது லக்ஷம் விதவைகள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர். இதன் கருத்தென்ன? கணக்கைப் பெருக்கச் சொன்னால், அந்தக்கஷ்டத்தை நினைத்து, தங்கள் அரிய யோசனைக்கு ஆதரவு கிடைக்கும் என்றெண்ணியா சொன்னீர்? இருக்கட்டும். ஷ தொகையில் மகம்மதிய விதவைகளும், கிறிஸ்தவ விதவைகளும், இதரமத விதவைகளும் சுமார் 3½-லக்ஷம் அடங்கி இருக்கவில்லையா? பாக்கி 36½லக்ஷத்திலும் அறுபதும் எழுபதும் நிறைந்த பழுத்த கிழவிகளும், போன் பேத்திகள் படைத்த பெருமாட்டிகளும் சேர்ந்திருக்கிறார்களல்லவா? பதினாறாவது வயதுக்குள் விவாகங்களைத் தடுத்துவிட்டால், ஐம்பது வயதானாலும்கைம்பெண்ணாகமாட்டார் என்று என்னஉறுதி? அன்றேல் விதவைகள் தொகையை வாய் நிறையச்சொன்னதின் கருத்துத்தான் என்ன?

மேலும் நமது ராஜதானியில் 1921-௵த்திய ஸென்ஸஸ்படி 15-வயதுக்குட்பட்டு எல்லா மதஸ்தினரிலும் 31,085 விதவைகள்தானே இருந்திருக்கிறார்கள்? அதில் மகம்மதியரும் கிறிஸ்தவர்களும் 1278-பேர் அடங்கியிருக்கவில்லையா? அவர்கள் மறுவிவாகம் பண்ணாதவர் என்றாவது கடைசி ஸென்ஸஸ் ஆனபின் பண்ணிக் கொள்ளவில்லை என்றாவது, தாங்கள் எப்படிச் சொல்லக்கூடும்?

இந்துக்களுக்குள்ளேயும், விதவைகளுக்கு மறுவிவாஹம் நடத்துகிற ஜாதியார் எத்தனை? அவர்கள் ஸங்கியை எத்தனை என்று தங்கள் கணக்கில் குறிப்பிட்டிருக்கிறீரா? 1921௵த்திய

ஸென்ஸஸ்படி, 15-வயதுக்குட்பட்ட விதவைகளின் ஸங்கியையில் தென்னுற்காடு தஞ்சாவூர் ஜில்லாக்களில் மாத்திரம் பஞ்சமர்களில் 596 விதவைகளும் கோதாவரி கிருஷ்ணு ஜில்லாக்களில் "மாலர்" களில் 560 விதவைகளும், விசாகபபட்டணம் கடப்பை ஜில்லாக்களில் 'கப்பு' ஜாதியாரில் 1765 விதவைகளும் இருந்திருக்கிறுர்களென்று உமக்குத் தெரியுமா? இம்மாதிரி எத்தனை ஜாதிகள்? அந்தந்த ஜாதிகளில் எத்தனை விதவைகள், அவர்களில் யார் யார் மறுவிவாகம் பண்ணிக்கொள்ளக்கூடாது, அல்லது பண்ணிக்கொள்ளவில்லை என்று தாம் கணக்கிட்டிருக்கிறீரா? மறுவிவாகம் பண்ணும் வழக்கம் உள்ள ஜாதியினரின் விதவைகளைப்பற்றி சட்டஸபையில் ஏன் பிரலாபிக்கவேண்டும்?

தவிரவும், 1921வருஷ ஸென்ஸஸ்படி, தஞ்சாவூர் தென் ஆற்காடுஜில்லா ஆதிதிராவிடர்களுள், 5வயதுக்குட்பட்ட விதவைகள் 73 பேர் இருந்திருக்கிறுர்களே; அதன் அர்த்தமென்ன? அக்குழந்தைகளுக்கு ஏற்பட்டிருந்த விவாகத்தின் ஸ்வரூபமென்ன? மேளம், பந்தல், தடபுடலுடன், மாற்றத்தகாத ஓரே தாலியாகக் கட்டிக்கொண்ட பெண்கள் என்று யார் விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள்? மாமன்மகளை அத்தைமகனுக்குக் கட்டிக் கொடுப்பதென்ற வழக்கத்தைக் கெட்டியாய்க் கைக்கொண்ட பல ஜாதியார் நம் நாட்டிலுண்டு. அதுபற்றியோ, வேறு காரணம் பற்றியோ, குழந்தை பருவத்திலேயே "இப்பெண் இவ்வாண்மகனுக்கு" என்று நினைத்தோ, சொல்லியோ இருந்தால் அதையும் விவாகமாகக் கருதி, கபடமற்ற கிராமவாஸிகள், குழந்தைகளையும் விதவைகளெனப் பெயரிட்டு, ஸென்ஸஸ்கணக்கனிடம் சொல்லியிருக்கலாம். ஸென்ஸஸ்கணக்கன் போன மறுதினமே, அக்குழந்தைகளுக்கு மறுவிவாகமாகி, இப்போது பிள்ளைகுட்டியுடன் இருக்கலாம். இல்லையென்று யார் சொல்லக்கூடும்? விதவைகள் எத்தனை ஆயிரம் என்று சொல்வதின் பயனென்ன? 16-வயது தாண்டிவிட்டால், வைதவ்யமென்பது ஏற்படாதா? எந்த வயதில் வைதவ்யம் வந்தாலும், எந்த வகுப்பினராயிருந்தாலும், மறுவிவாகம் பண்ணிக்கொண்டு சுகமாயிருக்கலாம் என்று தாராளமாய் சட்டம் இடம்கொடுக்கிறதே. அனுமதியிருந்தாலும், அனுசரிக்கமாட்டோமென்று பிடிவாதமாயிருப்பவர்கள் விஷயமாய், சட்டஸபையில் தாங்களும் மற்றவர்களும் கண்ணீர் விடுவதால்

பயனென்ன? குதிரையைக் குளத்தில் மட்டுமா கொண்டுபோய் விடுவேன். அதைக் குப்புற அமுக்கிக் குடிக்கவும் செய்வேன், என்று பிடிவாதம் பிடித்தாற்போல அனுமதியிருந்தும் மறுமணம் புரியா விதவைகளைப் புதுக்கணவருடன் பூட்டியே வைப்பேன் என்று பிடிவாதம் தோன்றினுல் அதற்கு "விதவாமறுவிவாக சட்டத்தில்" (Widow Remarriage Act) காவலும் அபராதமும் விதித்து ஒரு புது வாக்கியமல்லவா சேர்க்கவேண்டும்? சிறு பெண்கள் விவாகமொழிந்தால், ஒரு பெண்ணுமே விதவையாயிராள்போல எண்ணிச்சட்டம் செய்யப்புகுவது யுக்தியா, அறிவின்மையா?

(9) பிராம்மணர்களுள் 15-வயதுக்குள் எத்தனை விதவைகள் இருக்கிறுர்கள் என்று தாம் கணக்கிட்டிருக்கிறீரா? தஞ்சாவூர்ஜில்லா முழுவதிலும் சென்னப்பட்டணம் முழுவதிலும் சேர்த்து, 1921ஹு ஸென்ஸஸ்படி, 7-082 ஸ்திரீகளில் 15வயதுக்குட்பட்ட விதவைகள் 120 பேர் இருந்தார்களென்று தாங்கள் கவனித்தீரா?

(10) 1921ஹுத்திய ஸென்ஸஸ்படி, நமது ராஜதானியில் கிறிஸ்தவர்களில் 15 வயதிலிருந்து 40-வயதுவரையிலுள்ள 1000 ஸ்திரீகளில், 671-ஸ்திரீகள் விவாகமானவர்களும் 270 ஸ்திரீகள் கல்யாணமே ஆகாத தனிப்பெண்களாகவும் இருந்திருக்கின்றனரென்று தங்களுக்குத்தெரியும். அம்மாதிரி, இந்துக்களுள், அந்த வயதில் ஆயிரம் ஸ்திரீகளுள், 760 பேர்கள் விவாகமானவர்களாயும், 145 பேர்கள்தான் கலியாணமாகாதவர்களாயும் இருந்திருக்கின்றனரென்று தாம் அறிவீரா? மேலும் பிராம்மணர்களை மாத்திரம் எடுத்துக்கொண்டால், 15-வயதிலிருந்து 20-வயதுக்குள்ளாக ஆயிரம் பேர்களில், விவாகமானவர்கள் 889 பேர்களும், விவாகமாகாதவர்கள் 50 பேர்களும், இதற்கெதிராக கிறிஸ்தவர்களில் அதே வயதிலுள்ள ஆயிரம் ஸ்திரீகளில், 512-பேர்கள் விவாகமானவர்களும் 474-பேர்கள் விவாகமாகாதவர்களாகவும் இருந்திருக்கின்றனரென்று தாம் அறிவீரா? ஒருதரம் மணந்தும், புருஷரையிழப்பது தெய்வ வசம்; முதிர்வயதடைந்தும் கணவரே அடையாப்பெண்கள் பெருகுவது மனிதர் பிழை; மதக்கொள்கையென்றும், ஸமாஜ ஸம்பிரதாயமென்றும் கருதி, அவரவர் வழக்கத்தை, அதினின்றுண்டாகக்கூடும் சுகதுக்கங்களுக்குடன்பட்டு,

அவரவர் அனுஷ்டித்துவருகின்றனர். எந்த வழக்கத்தில் குணம் மிகுதி, சுகம் மிகுதி என்பதை, எந்த நிறையைக்கொண்டு யார் நிர்ணயிக்கிறது? உமது நிச்சயம் உலகோருக்கு உறுதியா?

(11) சட்டமூலமாய் பலாத்காரம்பண்ணி விவாகச்சடங்கை வெளிப்படையாய்ப் பண்ணும் வயதின் எல்லையே ஏற்றிவைக்கலாம்; ஆனால், காமம் தோன்றும் வயதின் எல்லையைச் சட்டமூலமாய் திட்டம் செய்யமுடியுமோ? மதம் என்ற பேச்சையே முழுதும் ஒழித்து, இஹலோக விஷயங்களைப்பற்றி மாத்திரம் கல்வி பயின்று ஒருவகை ஒழுக்கத்திலும் உறுதியில்லாது, நாடகங்களுக்குப் போயும், ஸினிமாக்கள் பார்த்தும், சிற்றின்ப விஷயங்கள் நிறைந்த நாவல்கள் வாசித்தும், நமது இளைஞர்கள் பலவிதத்திலும் காமத்தூண்டுதல்களுக்குள்ளாகும்படி விட்டுவிட்டு விவாகமாகும் வயதைமாத்திரம் சட்டமூலமாய் உயர்த்திவிட்டால், நன்மையுண்டாகுமா, கேடுகள் விளையுமா?

(12) தாமத விவாகங்கள் தாராளமாய் நடக்கும், நியூஸிலண்ட் (New Zealand) தேசத்தில், 1913—1921வருஷங்களில் ஏற்பட்ட 44579 ஜனங்களில், 23076 (அதாவது நூற்றில் ஐம்பதுக்கு மேற்பட்ட) ஜனங்கள், விவாஹமாகுமுன்னமேயே கர்ப்பமேற்ற பெண்களுக்குண்டாயினவென்று தங்களுக்குத்தெரியுமா? (" Safe Marriage " Ettie A Rout, page 79) இதையொரு பொருட்டாய் நினையாப் புத்தியும் சில பேருக்கிருக்கலாம்; உயிரே அழியினும், இவ்வெட்கக் கேட்டுக்கு உடன்படா மனத்தினரும் பலபேர்கள் உண்டு. எவ்வகை வாழ்க்கைவழிகளில் நாங்கள் ஈடுபடுவோமென்பது எங்கள் இஷ்டமா, அல்லது அதற்கு உங்கள் சட்டமா?

(13) உம்மைப்போல உயர்பதவியிலுள்ளோர் சட்டங்கள் பண்ணி எல்லோர் துக்கங்களையும்போக்க, மோட்டார்மீதேறி விரைவாய்ப் போகுங்கால், பக்கத்தில் நடக்கும் ஏழைமக்கள் சில சமயம் பொடியாய் நசுங்கி உயிர்மடிகின்றார்களே. அதனால் மோட்டாரில் செல்லுதல் ஒரு குற்றமென்று சொல்லி, ஜயிலும் அபராதமும் அதற்கு விதிக்க நினைப்பீரா? அல்லது, சில உயிர்கள் மாண்டாலும், மோட்டாரில் செல்லுதல் இன்றியமையாததென்றெண்ணி ஒழிவீரா? ஆயின், தம் விவாஹமுறைகளில் கஷ்டம் சிறிதிருந்தாலும், நன்மை மிகவுண்டென்று கைக்கொண்டவர்களைத் தண்டிக்கத் துணிவது மூர்க்கச்செயலன்றோ?

N. B:— இதை வேண்டுவோர் மறு அச்சு செய்துகொள்ளலாம்.

# காலத்தின் கொடுமை.

(330-வது பக்கத்தொடர்ச்சி)

ஆகவே அம்மகாமதாகஸ்யங்களை அறியக் கணப்பொழுதே னும் அவகாசம் கொடுக்காமல் லோகவழியிலேயே நடந்துசெல் லும் நாம் மதவிஷயத்தை நல்லதென்றும் கெட்டதென்றும் தள் என்றும் வைத்திரு என்றும் சொல்ல என்ன பாத்தியம் உண்டு. சற்று ஆலோசித்துப் பாருங்கள். ஆகவே நம் மதப்பொருப்பு நம்மிடமில்லை. நாம் மதத்தைவிட்டு விலகினால் மதத்திற்குக் கெடுதலில்லை. இல்லாதவனைச் சேர்த்தால் மதத்திற்கு மகிமையு மில்லை. ஆதலால் மதத்தைக் காப்பாற்றவும் அதனைப் பிரசாரம செய்யவும் பகவானேதான் அவதார விசேஷங்களால் மானிட லோகத்திற்தோன்றி தர்மம் குன்றி அதர்மம் மேலிடும்போது ஸாதுரக்ஷணதுஷ்டநிக்ரஹம்செய்து தர்மத்தை நிலைநாட்டிவிட்டு அச்சரீரத்தை மறைத்துக்கொள்ளும்போது தனது அம்சம்பெற்ற பரமபக்தனை அந்த வேலையில் வைத்துவிட்டுப்போவதாய் நாம் பூர்ணமாய் நம்பியிருக்கிறோம். அவ்விதம் பரம்பரையாய் மதத் தையும் நமது ஆசார நடவடிக்கைகளையும் கவனித்துக்கொண்டு வேறொரு விதமான பிரதிபலனையும் அபேக்ஷியாமல் உலகவிருப்பம் வேண்டாமென்று வெறுப்புக்கொண்டு துறவறம் பூண்டு முன் னோரது ஆஸனத்திலமர்ந்து அவரது ஆணையிற்கட்டுண்டு உலக ஸஞ்சாரம் செய்துகொண்டிருக்கிற நம் ஆசார்யசிகாமணிகளாகிய காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்போன்ற பீடாதிபதிகள்தான் மதத்திற்குக் காப்பாளர் என்று சொல்ல யாது தடை? அவர் கட்கு அப்பொறுப்பு இல்லையென்று அவர்களாலும் கூறமுடி யாது. நம்மாலும் மறுக்கமுடியாது. அவர்களது ஸஞ்சாரம் வெகு காலம்தொட்டே மதத்தைக் காப்பாற்றும் நோக்கம் ஒன்றையே வைத்துக்கொண்டு நடைபெற்றுவருகிறது. ஆதல்பற்றியே அவர் களுக்கு லோககுருவென்ற காரணப்பெயர் இன்னும் பிரகாசித் துக்கொண்டு வருகிறது. இதனால் உலகிலுள்ள இந்துமதஸ்தர் யாவரும் அவர்களின் சொற்படி நடக்கும் சீடர்களென்றாகிறது. குருவின் வாக்கியப்படி சீடன் நடக்கிறதா, சீடன் சொற்படி குரு நடக்கிறதா என்று சங்கையும் நிகழுமோ? அவ்விதம் நிகழ

இக்காலத்திய ஆங்கில கலாசாலைகள் இடம் கொடுத்தாலும் அது நம் குற்றமேயொழியக் கலாசாலைகளின் தர்மமல்ல. குரு சிஷ்யன் என்ற இரண்டு வடமொழிப்பதங்களின்உள் அர்த்தத்தை ஆராய்ந்தால், குருவென்பவர் பெரியவர் அக்ஞான இருளை அகற்றுபவர் என்றும்,சிஷ்யன் என்பவன் கீழ்ப்படிந்தவன் சிக்ஷிக்கத்தக்கவன் என்றும்தான் பொருள். ஆகவே பால்யத்தில் குருவினிடம்வணக்கத்துடன் பணிவிடைசெய்து அவரது மனதைப் பலவிதத்திலும் குளிர்ச்செய்து அவரது அனுக்ரஹத்தைப்பெற்று கிருஹஸ்தாச்ரமத்தை அடைந்தபிறகும் அங்கு பல சீடர்களுக்குக் குருவாய் இருந்தும் வயதில் முதிர்ந்தவர்களாய் ஆனபிறகும் மதவிஷயத்தில் நாம் பரமகுருவென்று வணங்கி லோகாசார்யர்களுக்குத்தொண்டு புரியவேண்டும். அவரது உபதேசமொழிகளைத் தலைமேல் தாங்கி நல்வழி பெறவேண்டுமென்றே அநாதிகாலமாய் நடப்பதால் அவ்வழியைத்தான் நாமும் பின்பற்றவேண்டும். அவ்விதம் செய்தால்தான் க்ஷேமம் உண்டாகும், இல்லாவிடில் க்ஷேமக்குறைவுதான் என்று சொல்லவும் வேண்டுமா? இதை நாம் ஞாபகத்தில் வைத்தால் மதத்தைச் சீர்திருத்துவதாய் சட்டஸபையில் இவ்விதமெல்லாம் மசோதா தயார்செய்ய எங்க ஆஸ்திகனாவது முன்வரக்கூடுமா? மசோதாவை எங்கு கொண்டுவரவேண்டும்? மதத்திற்கு பர்த்யஸ்தரிடமன்றோ கொண்டுவரவேண்டும். மதவிஷயத்தில் தலையிடுகிறதில்லையென்று நமக்கு உறுதிமொழி கொடுத்திருக்கும் ராஜாங்கத்தாரிடம் கொண்டுபோக நியாயம் ஏது? நம் ஆசார்ய ஸன்னிதிக்கல்லவா விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். லோககுருதான் மதத்தின் பொறுப்புதார், அவரைப் புறக்கணித்தால் மதத்தையே அவமதித்ததாகும். மதத்தை அவமானம் செய்கிறவன் அம்மதத்தின் சீர்திருத்தத்திற்குஅர்ஹனோ? ஆகவே மதவிஷயமாய் மசோதா கொண்டுவர நம் யாருக்குமே அதிகாரமில்லாமையால் ஆஸ்திகபுத்திமான்கள் இத்தகைய வீண் லோகோபகாரத்தில் பிரவேசித்து ஆசார்யர்களுடையவும் ஆஸ்திகர்களுடையவும் தன் முன்னோர்களுடையவும் மனதைப் புண்படுத்தாமல் வேறு விதமாய் லௌகிகத்திற்புகுந்து சீர்திருத்தம்செய்து புகழும் பெயரும் அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சுபம்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரீ.

## மணலூர்பேட்டை
# ஆர்யமதாபிவர்த்தனீஸபா.

ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதா சார்யாளுடைய அனுக்கிரஹத்தை முன்னிட்டு நாளது விபவஹு ஆனிமீ 14உக்கு (27-6-28) புதவாரம் மாலை 3-மணிக்குத் திருக் கோவிலூர்தாலூகா மணலூர்பேட்டை கிராமத்தில் ஆர்யமதாபி வர்த்தனீஸபா என்று பெயர் வஹித்து நவீனமாக ஒரு பிராம்மண ஸமூகம் கூடிற்று. அதாவது ஷை கிராமத்தில் அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகராகிய சிவகாம சுந்தரீஸமேத அகஸ்தீசுவர ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்றது. ஸபைக்கு வந்திருந்தவர்கள்.

திருவரங்கம் பிர்மஸ்ரீ ராஜகோபாலதாதாசாரியார், வாரகதா தாசாரியார், ஸ்ரீனிவாஸதாதாசாரியார், கீழையூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், உள்ளூர் சுப்பராயசாஸ்திரியள், பாலேசுவா சாஸ்திரி யள், இவர்களும் இன்னும் உள்ளூர் அக்ரஹாரத்திலுள்ள ஆஸ்தி கோத்தமர்கள் அனைவரும் ஏகமனதுடன் ஸபையை விருத்தி செய்யக் கருதி விஜயம் செய்திருந்தார்கள். அன்று மிக்க உக்கி ரமாக இருந்த கதிரவன் வெப்பத்தை எதிர்பாராது ஸ்ரீமுகப் பிரகாரம் குறிப்பிட்ட லக்கினத்தில் ஸ்தாபிக்கவேண்டி திருவரங் கம் ஸ்வாமிகள் மூவரும் ஸபைக்கு வந்து சேர்ந்தது ஸபைவிரு த்தி அடைவதற்கு சுபஸூசகமாக இருந்தது. பலருடைய வேண்டு கோளுக்கிணங்கி பிரும்மஸ்ரீபாலேசுவரசாஸ்திரியள் அக்கிராஸனம் வகித்தனர். பிரும்மஸ்ரீ ராஜகோபாலதாதாசாரியார் அவர்கள் ஸம்ஸ்கிருதத்தின் மஹிமையை சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராணம் ராமாயணம் முதலிய அனேக கிரந்தங்களினின்றும் எடுத்துரை த்து அதின் தாத்பர்யங்களையும் தமிழ் பாஷையில் உபன்யஸித்து, ஆனந்தவருஷமாக வருஷித்தனர். ஸபைக்கு வந்திருந்த அனை வர்களும் இனி ஸம்ஸ்கிருதத்தைத் தவர விடாமல் அபிவிருத்திக் குக் கொண்டுவர வேண்டுமென்கிற உறுதியைக்கைக்கொண்டார் கள். பிரும்மஸ்ரீ வாரகதாதாசாரியார் அவர்கள் ஸம்ஸ்கிருதத் தினால் உண்டாகும் பிரயோஜனங்களைப் பற்றி வெகு அழகாக உபன்யஸித்தனர். அதுவும் ஸபையோர்களுக்கு ஆனந்த குதூ ஹலத்தைத் தந்தது. கீழையூர் பிர்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியள்

ஏற்கனவே இவ்வூரில் ஒரு ஸபை ஏற்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கைநெடுநாளாய்வைத்திருந்தபடி ஸபைகூடிவிட்டதென்கிற திருப்தியோடு சிரத்தையுடன் வந்திருந்து விநயச்சொற்களால் ஸப்பியர்களை ஆனந்திக்கச் செய்ததானது யாவரும் வியப்புறத் தக்கதே. அக்ராஸனர் ஜனங்களை உபசார வார்த்தைகள் சொல்ல 6-மணிக்கு ஸபை கலைந்தது. ஷை ஸபைக்குப் பிரஸிடெண்டு, காரியதரிசி, முதலானவர்களுடைய ஏற்பாட்டைக் காயம் செய்ய அடுத்த ஸபையை எதிர்பார்த்திருக்கிறது. இந்த ஸபையைப் பிரதி தமிழ் மாதமும் 14, 30 உகளில் இரண்டுதடவையாகத் தவ ராமல் கூடப்படுமென்று நிச்சயித்திருக்கிறது. இந்த ஸபை மேல் கண்டபடி பிரதி மாதங்களிலும் நிர்விக்னமாக நடைபெற்றுவா அனுக்ரஹிக்க வேண்டுமென்று ஸ்ரீ ஜகத்குரு அவர்களைப் பிரார்தி க்கிறோம்.

M. கிருஷ்ணஸாமி அய்யர்,
ஸ்ரீமடம் முத்திரை கர்த்தா.

---

# ஸ்வாராஜ்ய ஸித்தி.

(ஓர் ஆராய்ச்சி.)

एतावदेव भुवि पुंभिरवाप्तुमर्हं यच्चेतसो निलयनं निजतत्वबोधे ।
आक्रोशनं श्रुतिशिरांसि यदर्थमेव कुर्वन्ति येन हि भवेत्पुरुषस्सुखाब्धिः ॥

ஏதாவதேவ புவி பும்பிரவாப்துமர்ஹம்
யச்சேதஸோ நிலயநம் நிஜதத்வபோதே ।
ஆக்ரோஶநம் ஶ்ருதிஶிராம்ஸி யதர்த்தமேவ
குர்வந்தி யேந ஹி பவேத்புருஷஸ்ஸுகாப்தி: ॥

"உலகத்தில் புருஷனுடைய கடமை தன் மனதை ஆத்ம ஸ்வரூபத்தில் செலுத்துவதே. இவ்விஷயத்தையே உபநிஷத் முதலிய கிரந்தங்கள் முறையிடுகின்றன. இதனாலேயே புருஷன் ஸுகஸ்வரூபனாகிறான்" என்று ஸ்ரீசதாசிவேந்திர ஸரஸ்வதி கூறிய படி ஆத்மஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு இச்சம்சாரசாகரத் தைத் தாண்டுவது அவசியமென்றும், இக்கடலைத் தாண்டுவதற்கு

देहेन्द्रियासु हृदयादिकचैत्यवर्गात्प्रत्यक्चितेर्विभजनं भववारिराशेः ।
संतारणे प्लव इति श्रुतिडिण्डिमोऽयं तस्माद्विचारय जडाजडयोःस्वरूपम् ॥

𑌦𑍇𑌹𑍇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑌿𑌕𑌵𑍇𑌦𑍍𑌯𑌵𑌰𑍍𑌗𑌾𑌤𑍍
𑌦𑍃𑌗𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑌨𑌂 𑌭𑌵𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌶𑍇𑌃 ।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌣𑍇 𑌪𑍍𑌰𑌭𑌵 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌬𑌿𑌂𑌬𑌿𑌤𑍋𑌦𑍍𑌯𑌂
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌚𑌾𑌰𑌯 𑌜𑌡𑌾𑌜𑌡𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 ॥

என்றும் ஷி மகானே கூறியபடி தேகம், இந்திரியங்கள், பிராணன், மனது முதலிய 𑌦𑍃𑌶𑍍𑌯 𑌰𑍂𑌪 வஸ்துக்களிலிருந்தும் 𑌦𑍃𑌕𑍍 𑌰𑍂𑌪 ரூபனுகிய ஆத்மாவை வேறுபிரித்தறிவதே ஓர் ஓடமாகும். என்று மேற்படுவதால், இதற்காகவே முயற்சிசெய்வது அவசியம். இதை உத்தேசித்தே சாஸ்திரங்களில் கூறப்படுவதாவது:—

योऽन्यथा सन्तमात्मानमन्यथैव प्रबुध्यते ।
किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा ॥

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌥𑍈𑌵 𑌪𑍍𑌰𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌿𑌂 𑌤𑍇𑌨 𑌨 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑍋𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌾 ॥

"எவன் உண்மையாகவே ஒருவிதமாயிருக்கும் ஆத்மஸ்வரூபத்தை அதற்கு விரோதமாக வேறொரு விதமாகத் தெரிந்துகொள்ளுகிறானோ, அவன் பரஸ்வத்தை அபஹரிக்கும் சௌர்யத்தைவிடமிகக் கடுமையான, ஸ்வரூபத்தையே அபஹரிக்கும் சௌர்யத்தின் பாபத்திற்காளாகிறான்.

இதனால் தேகாதிகளில் ஆத்மபுத்தியை த்யஜித்து நித்யசுத்த புத்த முக்த ஸ்வரூபனாகவே ஆத்மாவைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமென்றேற்பட்டது. இதற்காகவே நமது பரமாசார்யாள், பிரம்மஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் முதலிய பெரியோர்கள் மிகவும் சிரமப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்விதம் அபாரமாகிய இச்சம்ஸாரஸாகரத்தில் முழுகித்தத்தளிக்கும் அக்ஞர்களை அதிலிருந்தும் உத்தாரணம் செய்வதற்காகவே அத்வைத வேதாந்தத்தின் பிரகரணரூபமாக "ஸ்வாராஜ்ய ஸித்தி" என்றும் பெயருடன் இயற்றப்பட்டிருக்கும் இக்கிரந்தம்,

स्रग्धरा, शार्दूलविक्रीडितं, मन्दाक्रान्ता, मालिनी, उपजाति
𑌸𑍍𑌰𑌗𑍍𑌧𑌰𑌾, 𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑌂, 𑌮𑌨𑍍𑌦𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾, 𑌮𑌾𑌲𑌿𑌨𑍀, 𑌉𑌪𑌜𑌾𑌤𑌿
முதலிய பெரிய விருத்தங்களில் சுமார் 170-சிலோகங்களால்,

अध्यारोपप्रकरणं, अपवादप्रकरणं, कैवल्यप्रकरणं 𑌅𑌧𑍍𑌯𑌾
𑌰𑍋𑌪𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌂, 𑌅𑌪𑌵𑌾𑌦𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌂, 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌂

என்றுமூன்றுப்ரகரணங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் பெயரினாலேயே இவைகளில் பிரதிபாதிக்கப்படும் விஷயங்

கள் புலப்படுவதாயினும், பிரதானமான விஷயங்களையொட்டி அதற்கனுகூலமாகவே இதில்சொல்லப்படும் மற்றவிஷயங்களில், அத்யாரோபப் பிரகரணமாகிய முதல் பிரகரணத்தின் விஷயங் களைச் சற்று விரிவாகவே விசாரிப்போம்.

கிரந்த கர்த்தா முதலில் சிஷ்டாசாரப்படி மங்களாசரணம் செய்து, பிறகு சாஸ்திர சம்பிரதாயப்படி அதிகாரி, விஷயம், சம்பந்தம், பிரயோஜனம் என்றும் அனுபந்த சதுஷ்டயத்தையும் கூறிப்பிறகுஇச்சம்ஸாரபந்தம்அத்யாஸத்தால் ஏற்பட்டதென்றும் இதற்கு மூலம் அவித்யை என்றும், இதை நிவர்த்திப்பது வித்யை அதாவதுக்ஞானத்தாலன்றி கர்மா, உபாஸனை இவைகளால் முடியாதென்றும் கூறுவது மிகவும் அழகாயும், எளிய நடையிலும், அத்வைத ஸித்தாந்தத்தைஅனுஸரித்துமிருப்பதுமிகவும் சிலாகிக் கத் தக்கதே. இவ்விதம் கூறிப்பிறகு சார்வாகன், பௌத்தன், ஸாங்கியன், பாதஞ்சலன், நையாயிகன் முதலிய வாதிகள் ஆத்மா வென்று கூறும் சரீரம், விக்ஞானம், முதலியதுஆத்மாவல்லவென் றும், அது அணு, சரீர பரிமாணமுடையது, முதலிய மதங்கள் அப்ராமாணிகங்களென்றும், ஸாங்கியாதிகள் கூறும் பிரகிருதி முதலியது, ஜகத்காரணமாகமாட்டாதென்றும், முதலில் சுருக்க மாகவே கூறிப்பிறகு யுக்திகளுடன் ஒவ்வொரு மதமும் விரிவாக வே கண்டிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் கணடிக்கப்பட்ட பிறகு அத்வைதிகளின் ப்ரக்ரியை, அவர்கள் சொல்லும் ஆத்ம ஸ்வரூபம், அதுவே யுக்திக்கும் சுருதிக்கும், ஸித்தாந்தத்திற்கும், ஒத்தது. அத்யாஸஸ்வரூபம் இவைகள் விமரிசையாகவே விவரிக் கப்பட்டிருக்கின்றன. இவருடைய சைலியைப் பார்த்துஆனந்திப் பதற்காகவே சில வசனங்களை இங்கெடுத்துக் காட்டுவோமாக.

பந்தம் 'ஆத்யாஸிகம்' என்றும்கூறும் வசனமாவது:—

ज्ञात्वा देवं सर्वपाशापहानिर्नान्यः पन्थाश्चेति भूयो वचोभिः ।
ज्ञप्तेस्साक्षान्मुक्तिहेतुत्वसिद्धावध्यासत्वं बन्धनस्यार्थसिद्धम् ॥

𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌶𑌾𑌪𑌹𑌾𑌨𑌿𑌰𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌭𑍂𑌯𑍋 𑌵𑌚𑍋𑌭𑌿𑌃 । 𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍇𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑌧𑍍𑌯𑌾𑌸𑌤𑍍𑌵𑌂 𑌬𑌨𑍍𑌧𑌨𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

இதன் கருத்து

ज्ञात्वा देवं सर्वपाशापहानिः 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌶𑌾𑌪𑌹𑌾𑌨𑌿𑌃

क्षीणैः क्लेशै र्जन्ममृत्युप्रहाणिः । नान्यः पन्था विद्यतेऽयनाय ।
यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः ।
तदा शिवमविज्ञाय दुःखस्यान्तो भविष्यति ॥

𑌕𑍍𑌷𑍀𑌣𑍈𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑍈𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌪𑍍𑌰𑌹𑌾𑌣𑌿𑌃 ।
𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌽𑌯𑌨𑌾𑌯 ।
𑌯𑌦𑌾 𑌚𑌰𑍍𑌮𑌵𑌦𑌾𑌕𑌾𑌶𑌂 𑌵𑍇𑌷𑍍𑌟𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌤𑌦𑌾 𑌶𑌿𑌵𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
ज्ञात्वा मां शान्तिमृच्छति । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿

என்றும் வசனங்களால் "க்ஞானத்தால் பந்த நிவர்த்தி (மோக்ஷ) என்றேற் படுவதால் தெரிந்துகொள்ளாததே (அவித்யையே) இப் பந்தத்திற்கு (ஸம்ஸாரத்திற்கு)க் காரணம். ஆகையால் இது ஆத்தியாஸிகம் என்பது சொல்லாமலே விளங்கும்.

सत्यं भावं न वित्तिर्व्यपनुदति, यतः कर्मनाश्यो घटादि-
र्मिथ्याभूतं च कर्म क्षपयति न तथा वित्तिघात्यं यतस्तत् ।
इत्थं सिद्धे विभागे श्रुतिशिखरगिरा वित्तिघात्यः प्रतीतो
बन्धो मिथ्येति सिद्धे, न तदपहतये कर्मजातं समर्थम् ॥

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌨 𑌵𑌿𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌪𑌨𑍁𑌦𑌤𑌿 𑌯𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌨𑌾𑌶𑍍𑌯𑍋 𑌘𑌟𑌾𑌦𑌿𑌰𑍍𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍍𑌷𑌪𑌯𑌤𑌿 𑌨 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑌿𑌘𑌾𑌤𑍍𑌯𑌂 𑌯𑌤𑌸𑍍𑌤𑌤𑍍 । 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌵𑌿𑌭𑌾𑌗𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌖𑌰𑌗𑌿𑌰𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑌿𑌘𑌾𑌤𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍋 𑌬𑌨𑍍𑌧𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑍇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌨 𑌤𑌦𑌪𑌹𑌤𑌯𑍇 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌤𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑌮𑍍 ॥

"குடம் முதலிய (வ்யாவஹாரிக) ஸத்யமான பாவ பதார்த்தம் मुद्गरप्रहारं 𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌪𑍍𑌰𑌹𑌾𑌰𑌮 உலக்கை முதலியவையால் அடித்தல் முதலிய கிரியைகளாலே நசிப்பது போல் மித்யாவஸ்து (பொய்யானவஸ்து கிளிஞ்சலைப் பார்த்து வெள்ளியென்றும் பிரமிப்பது முதலானது) க்ஞானத்தாலன்றி கர்மத்தால் நிவர்த்திக்கமாட்டாது. இவ்விதம் ஸித்தாந்தமேற்பட்டிருக்க, க்ஞானத்தால் இது (பந்தம்) 'நிவிருத்திக்கும்' என்றும் சுருதியானது கர்மத்தால் (கிரியையால்) நிவர்த்திக்காது, என்றும் அபிப்பிராயத்தால் இது மித்தியை, ஆத்தியாஸிகம் சுக்தி ரஜதத்தைப்போன்றது என்பதைஸ்பஷ்டமாகவே வெளிப்படுத்துகின்றது. (இன்னும்வரும்)

பண்டிட் கே. ஆர். அனந்த கிருஷ்ணசாஸ்திரி
வித்வான் சிரோமணி.